**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**CC.No.47/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | சரவணக்குமார் (PW-2) | | |
| Father's Name | கருப்புசாமி | | |
| Village | பாண்டியன் நகர் | | |
| Taluk | திருப்பூர் | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12**th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் மேற்சொன்ன முகவரியில் வசித்துக் கொண்டு பனியன் கம்பெனியில் பேக்கிங் வேலை செய்து வருகிறேன். 11.09.2021 தேதி மாலை சுமார் மூன்று மணி அளவில் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் எதிரில் உள்ள சென்ட்ரல் பேக்கரியில் டீ சாப்பிட சென்றபோது போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் அன்று காலை சுமார் பத்து மணிக்கு மேல் நடந்த விபத்து சம்பவ இ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள் அதற்கு ஆதரவு ஆதரவாக பார்வை மகஜரில் நான் இரண்டாவதாக செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ .2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

நானும் காலம் சென்ற மணியின் மகன் போத்திராஜ் இருவரும் ஒரே கம்பெனியில் பணி செய்து வருகிறோம் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். நடந்தது சம்பந்தமாக போத்திராஜ் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தபோது நானும் அவருடன் சென்று இருந்தேன் என்றால் சரிதான்.

காவல் நிலையத்தில் வைத்து என்னை போலீசார் விசாரணை செய்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் காவல்துறையினர் வரைபடம் வரைந்து அனைத்தையும் தயார் செய்து வைத்திருந்தனர் என்றால் சரிதான். அந்த மகஜர் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காலம் சென்ற மணி என்பவரின் மகன் போத்திராஜ் என்னுடைய நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பரிந்து நீதிமன்றத்தில் பொய் சாட்சி மதிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |